**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.36
https://ngmtamil.in/

# அருந்ததியர் இளையோர் பெண்களின் வாழ்க்கைச் சடங்குகள்

**முனைவர் சகுந்தலா தேவி பொ,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,

பண்ணாரி அம்மன் தொழில் நுட்பக் கல்லூரி, சத்தியமங்கலம்.

மண்ணின் மைந்தர்கள் மனக்கருவரையில் கருக்கொண்டு உருப்பெற்று உயிர்ப் பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிபாடுகள் நாட்டு புற இலக்கியங்களாகும். மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், பழமையான எண்ணங்கள் ஆகியவற்றை வெளிப்படையாக காட்டுவது நாட்டுப்புற இலக்கியங்கள்.திருப்பூர் மாவட்டம் அனுப்பப் பட்டி கிராமம் அருந்ததியர் இளையோர் பெண்களின் வாழ்வியல் நிலை நம்பிக்கை சார்ந்த சடங்கு முறைகளை எடுத்துரைக்கும் விதமாக இக் கட்டுரை அமைகிறது.

**வழக்காறு சொல் விளக்கம்:**

"நாகரிகம் வாய்ந்த மரபுவழி வந்த படைப்புகளும் நாகரீகமற்ற பழங்குடி மக்களின் மரபுவழி படைப்புகளும் நாட்டார் வழக்காற்றியலாகும்.இவை ஒலிகளையும் சொற்களையும் ஒரு வித ஓசை அமைப்புக்கு உட்படுத்தி அமைக்கப்பட்டவைஆகும்.மேலும் மக்களை நம்பிக்கைகள்,பழக்கவழக்கங்கள், நிகழ்த்துதல்கள், நடனம், நாடகங்கள் முதலியவைகளும் இதற்குள் அடங்கும். நாட்டார் வழக்காற்றியல், நாட்டார் பற்றிய ஓர் அறிவியல் அல்ல. ஆனால் மரபு சார்ந்த நாட்டார் தம் அறிவியல், மரபு சார்ந்த நாட்டார் தம் பாடல் பற்றிய அறிவியல்" என்கிறார் ஜோளால் பாலிஸ்.

"எழுத்து வழக்கற்ற வாய்மொழி சார்ந்த பண்பாட்டில் எல்லாமே நாட்டார் வழக்காற்றியலாகும்" என்று பிஏ போட்கின் என்ற அறிஞர் கூறியுள்ளார்.

**வழக்காறுகள்:**

நாட்டுப்புற வழக்காறுகளை இரண்டு வகைகளாக பிரிக்கலாம்.1.வாய்மொழி வழக்காறுகள் 2.வாய்மொழி சாரா வழக்காறுகள்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இதில் வாய்மொழி சாரா வழக்காறுகளில் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகளில் சடங்குகள் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**வாழ்க்கை வட்டச் சடங்குகள்:**

மனித வாழ்க்கையில் சடங்குகள் பிரிக்க முடியாத ஒன்று பிறப்பு முதல் இறப்பு வரையிலும் வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் சடங்குகள் செய்கின்றனர் வாழ்க்கைச் சடங்குகள் நான்கு வகையாக பிரிக்கலாம்.

1.பிறப்புச் சடங்குகள் 2.பூப்பு சடங்குகள் 3.திருமண சடங்குகள் 4.இறப்பு சடங்குகள்

**பிறப்புச் சடங்குகள்**:

குழந்தை வயிற்றில் உண்டாகி பிறந்து ஆளாகும் வரை செய்யும் சடங்குகள் அனைத்தும் பிறப்பு சடங்காகும் பிறப்புச் சடங்குகளை இரண்டு வகையாக பிரிக்கலாம் 1.குழந்தை பிறப்புக்கு முன் உள்ள சடங்குகள் 2.குழந்தை பிறப்புக்கு பின் உள்ள சடங்குகள்

**குழந்தை பிறப்புக்கு முன் உள்ள சடங்குகள்:**

**வளைகாப்பு:**

குழந்தை வயிற்றில் உண்டான ஐந்து அல்லது ஏழாவது மாதத்தில் வளைகாப்பு செய்வார்கள். தாய் வீட்டார் பெண்ணுக்கு செய்யும் சடங்காகும் தாய்வீட்டார்கள் பழம்,பலகாரம்,பூ,பொட்டு,வளையல் எல்லாம் வாங்கிக்கொண்டும் ஐந்து வகையான உணவுகள் செய்து கொண்டும் மாப்பிள்ளை வீட்டுக்கு செல்வார்கள்.அங்கு பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் திருமணப் புடவையை அணிய வைத்து வீட்டில் இருவரையும் ஜோடியாக அமரச் செய்து அவர்கள் முன்பு தாய் வீட்டார் கொண்டு சென்ற பொருட்களை வைத்து தெய்வத்தை வணங்கி இருவருக்கும் பொட்டு வைத்து மாப்பிள்ளை பெண்ணுக்கு வளையல் அணிவித்து விடுவார். பின்னர் மாங்கல்ய பெண்கள் பெண்ணுக்கு வளையல் அணிவித்துவிட்டு அவர்களும் அணிவார்கள். பின்னர் கொண்டு சென்ற பலகாரம், உணவு இவைகளை அனைவரும் உன்பர். பெண்ணும் மாப்பிள்ளையும் அதே உடையுடன் பெண்ணின் வீட்டிற்கு அழைத்து வருவார்கள், பின்னர் பெண் குழந்தை பிறந்து மூன்று மாதம் வரை அங்கேயே இருப்பாள்.

**குழந்தை பிறப்புக்கு பின் உள்ள சடங்குகள்:**

சுப்பிரசவம் எனில் வீட்டில் பார்ப்பார்கள் குழந்தை வீட்டில் பிறந்தால் நீரைக் காய வைத்து குழந்தைக்கும் தாய்க்கும் குளிக்க வைப்பார்கள், குழந்தைக்குத் தாய்பாலை கொடுப்பார்கள், குழந்தைக்கு ஒரு மாதமான பிறகு குளிக்கும் போது ஜாதிக்காய், மாசிக்காய் அரைத்து கடலை மாவுடன் கலந்து தேய்த்தால் எந்த கிருமியும் குழந்தையைத் தாக்காது. பின்னர் ஆவாரஞ் செடிக் கொழுந்தை பறித்து அரைத்து குழந்தைக்கு குளிக்கும் போது தேய்த்து குளித்தால் உடல்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

குளிர்ச்சியாக இருக்கும். குழந்தை பிறந்த மூன்று மாதத்தில் மிளகு, சீரகம், கருவேப்பிலை, வெள்ளைப் பூண்டு இவற்றை அரைத்து தாழித்து தாய்க்கு கொடுத்தால் உடல் வலி நீங்கும். தினமும் குடிக்கலாம் இல்லையெனில் வாரத்தில் இரண்டு முறை கொடுக்கலாம் இவ்வாறு குடித்து வந்தால் தாய்க்கும் குழந்தைக்கும் நோய்த்தொற்று வராது என்பதால் நாட்டு மருத்துவத்தை கடைபிடிக்கின்றனர்.

**பெயர் சூட்டும் விழா:**

குழந்தை பிறந்த நேரத்தை வைத்து ஜாதகம் பார்த்து அதன்படி பெயரை தேர்வு செய்து குழந்தை பிறந்த மூன்று நாள் மூன்றாவது நாளிலும் நான்காவது நாளிலும் பெயர் வைப்பார்கள்.சிலர் மூன்று மாதத்தில் உறவினர்களை அழைத்து குழந்தையின் பாட்டி அல்லது தாத்தா குழந்தைக்கு பெயர் வைப்பது மரபாகும்.

**காதணி விழா:**

குழந்தைக்கு பதினோரு மாதம் ஆகும் போதோ அல்லது அதற்கு பிறகோ காதுகுத்துவர்கள் குழந்தையின் அம்மா வழித் தாத்தா, பாட்டி, தாய்மாமன்மார்கள் காதணியை எடுத்து வருவார்கள். உறவினர்களை அழைத்து விருந்து வைத்து பின்னர் காது குத்தும் ஆசாரியை அழைத்து வந்து குழந்தையை மாமன் மடியில் உட்கார வைத்து காது குத்துவது வழக்கமாகக் கொண்டுள்ளனர். மாமன் இல்லை என்றால் தாத்தா மடியில் உட்கார வைத்து காது குத்துவார்கள்.இந்தச் சடங்கு பெண்ணின் திருமணத்துக்கு பிறகு தாய் வழி உறவை மேம்படுத்தும் விதமாக அமைகிறது.

**பூப்புச்சடங்குகள்:**

பெண் பூப்பு அடைந்ததற்கு செய்யும் சடங்கு பூப்புச்சடங்கு ஆகும். பூப்புச் சடங்கு இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.1.பூப்பு அடைந்த உடனே செய்யும் சடங்குகள் 2.பூப்பு நீராட்டின் போது செய்யும் சடங்குகள்.

**பூப்படைந்த உடனே செய்யும் சடங்குகள்:**

பெண் வயதிற்கு வந்தவுடன், பெண்ணின் தாய்மாமன், அத்தையின் வீடுகள் அருகில் இருந்தால் முதல் நீரை அத்தை ஊற்றுவார். பின்னர் ஐயரிடம் சென்று நல்ல நாள் பார்த்து குறித்து வந்து மாமனுக்கு தெரிவிப்பார்கள், தாய்மாமன் பெண்ணுக்கு பாவாடை தாவணி,வளையல், பொட்டு, கண்ணாடி எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து, அத்தைமார்கள் பெண்ணுக்கு நீர் ஊற்றி தாவணி உடுத்தி உணவு பரிமாறுவார்கள்.

**பூப்பு நீராட்டின் போது செய்யும் சடங்குகள்:**

பெண் பூப்படைந்து ஒரு மாதமோ இரண்டு மாதமோ கழித்து செய்யும் சடங்கு சீர் என அழைக்கப்படுகிறது. சீருக்கு முந்தைய நாளில் மாமன் மீண்டும் பட்டுப் புடவை, கண்ணாடி, சீப்பு, வளையல் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வந்து சீர் செய்யும் நாளன்று மாமன் பச்சை

ஓலையில் குடிசை கட்டி அதற்குள் பெண்ணை விட்டு புடவை கட்டி வெளியே அழைத்து வந்து, உட்கார வைத்து பெண்ணின் முன்னாள் பழங்கள், இனிப்புகள் வைத்து அத்தை மற்றும் மாமன் போட்டு வைப்பார்கள். பின்னர் பெண்ணின் கையில் மைகோதியை கொடுத்து கிழக்குத் திசையில் உட்கார வைத்து கம்புத் தட்டை சுற்றிலும் வைப்பார்கள். பின்னர் மாமனும் அத்தையும் கம்புத் தட்டை கையில் எடுத்து பெண்ணின் தலை,உடம்பு, கால் ஆகிய மூன்று இடத்தில், மூன்று முறை வைத்து எடுப்பார்கள். பின்னர் பெண்ணை குடிசையில் விட்டு மாலையில் மாமன்குடிசையை பிடுங்கி எடுப்பார். இந்த சடங்கில் தாய் மாமனும்,அத்தையும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.இந்த பூப்புச் சடங்கை சீர் என்று அழைப்பது வட்டார வழக்குச் சொல் ஆகும்.

**திருமணச் சடங்குகள்:**

பெற்றோர்களின் ஒப்புதலோடு செய்யப்படும் திருமணத்திற்கு சடங்குகள் செய்யப்படுகிறது. திருமணம் செய்ய பெண் வீட்டாருக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கும் விருப்பம் இருந்தால் இருவரும் வீட்டிலும் நல்ல நாள் பார்த்து திருமணம் செய்வார்கள். திருமணச் சடங்கு மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது.

1.திருமணத்திற்கு முன் நடக்கும் சடங்குகள்

2.திருமணத்தன்று நடக்கும் சடங்குகள்

3.திருமணம் முடிந்த பிறகு நடக்கும் சடங்குகள்

**1.திருமணத்திற்கு முன் நடக்கும் சடங்குகள்**

திருமணத்திற்கு முன் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை பார்க்க வருவார்கள். பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பிடித்திருந்தால் நல்ல நாள் பார்த்து இருவர் வீட்டிற்கும் சாப்பிட செல்வார்கள். அதன் பிறகு நிச்சயதார்த்தம் நடைபெறும், அதனை தொடர்ந்து பட்டினி சூரியனும் கடந்து நடைபெறும்**.**

**நிச்சயதார்த்தம்**

பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் ஒரு கோவிலுக்கு செல்வார்கள். அங்கு இருவர் வீட்டில் உள்ள பங்காளிப் பெண்கள் வருவர். பெண்களின் கையில் ஒவ்வொரு கூடையைக் கொடுத்து அதில் உப்பு, பழங்கள்,வெற்றிலை பாக்கு வைத்திருப்பார்கள், நல்ல நேரத்தில் இரு பெண்களும் இரு கை அளவு உப்பையும்,பழங்களையும், வெற்றிலைப் பாக்கையும் பரிமாற்றி கொள்வார்கள். இவ்வாறு நிச்சயதார்த்தம் செய்யப்படுகிறது.

**பட்டினி சோறு**

முகூர்த்தத்திற்கு முந்தைய நாள் பட்டினி சோறு பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அவரவர் வீட்டில் நடக்கும் முக்கியமான சடங்கு ஆகும்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மணமக்கள் பட்டினி இருந்து தாய் மாமன்மார்கள் இனிப்பு மற்றும் உணவு சமைத்து மண மக்களுக்கு வழங்கி நிறைவு செய்வார்கள். இந்த சடங்கு மணமகள் மணமகள் இருவர் வீட்டிலும்ஒரே மாதிரி நடைபெறும். இங்கே பெண்ணின் மாலையில் பெண்ணுக்கு நீரூற்றி உட்கார வைத்து நான்கு வெற்றிலை, நான்கு பாக்கு, இவற்றை ஜோடியாக வெண்கல தட்டில் வைத்து அதில் பாலை ஊற்றி, தாய் தகப்பன், மாமன் அத்தை இவ்வாறு இணையாக வந்து பாலை 2 விரலில் தொட்டு பெண்ணின் நெற்றியில் வைப்பார்கள். இதுபோல் 10 11 ஜோடிகள் வந்து செய்வார்கள். இதில் நான்கையாள் குழந்தையாள், மாமன் -மச்சான் இவ்வாறு இணை சேர்ந்தும் சடங்கு செய்வார்கள்.

பின்னர் பெண்ணுக்கு தண்ணீர் ஊற்றி, வாசலை நிற்க வைத்து பிள்ளையார் வைத்து, சாம்பிராணி போட்டு, தேங்காய் பழம் உடைத்து வைத்து, கம்புத் தட்டை இரண்டு எடுத்து அதைக் குறுக்க வைத்து பெண்ணின் மார்பில் மூன்று முறை வைப்பார்கள். அதன் பிறகு பெண்ணை உட்கார வைத்து பலகாரம் வைத்து சாப்பிடும்போது வாழைப்பழத்தில் பாதியும், ஒரு பிடி சோறும் எடுத்து தாய் தந்தைக்கு கொடுப்பாள். இது இன்றோடு பெண் வேறு வீட்டிற்கு செல்கிறாள் என்பதை குறிக்கும் சடங்காகும். இதுபோல் பெற்றோர் பெண்ணுக்கு கொடுப்பார்கள். பரியம் மாப்பிள்ளையிடம் வாங்கிக் கொண்டுதான் பெண்ணை கொடுப்பார்கள். இரவில் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்கு வருவார்கள் பெண்ணிற்கு முகூர்த்த புடவை அவர்களே எடுத்து பெண்ணுக்கு கொடுப்பார்கள்.

**திருமணத்தன்று நடைபெறும் சடங்குகள்**:

**முகூர்த்தம்**

மனவரைக்கும் மாப்பிள்ளையை முதலில் அழைத்து வருவார்கள். மாப்பிள்ளையை, அவரின் தாய்மாமன் தூக்கிக்கொண்டு மனவரையை மூன்று முறை சுற்றிக்கொண்டு வந்து உட்கார வைப்பார்கள்.அதே போல் பெண்ணை தூக்கிக்கொண்டு மனவரையை மூன்று முறை சுற்றிக்கொண்டு வந்து உட்கார வைப்பார்கள். பின்னர் மாப்பிள்ளை பெண்ணுக்கு தாலி கட்டுவார்.முதலில் பெண் வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள்.பின்னர் மாப்பிளை வீட்டுக்கு அழைத்துச் செல்வார்கள். இதை பெண் அழைப்பு, மாப்பிள்ளை அழைப்பு என்பார்.

**திருமணம் முடிந்த பின் நடைபெறும் சடங்குகள்:**

**சம்பந்தி விருந்து** :

சம்பந்தி விருந்து என்பது பெண்ணின் பெற்றோர்கள், மாப்பிள்ளையின் பெற்றோர்களுக்காகவும், மாப்பிள்ளையின் பெற்றோர்கள் பெண்ணின் பெற்றோர்களுக்காகவும் விருந்தளிப்பார்கள். விருந்திற்கு உறவினர்கள் இருவர் வீட்டிலும் அழைக்கப்படுவார்கள்

பெரும்பாலும் அசைவம் விருந்து ஏற்பாடு செய்வார்கள். இரு சம்மந்திகளும் விருந்து அளிப்பதால் இது சம்பந்தி விருந்து என அழைக்கப்படுகிறது.

**தலை நோம்பி:**

புதிதாக திருமணமானவர்களுக்கு வரும் முதல் நோன்பை தலை நோம்பு என்பார்கள். இதற்கு பெண் வீட்டார் மாப்பிள்ளைக்கு எண்ணெய்த் தேய்ப்பு வைப்பார்கள். பின்னர் நகைகள் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் எடுப்பார்கள். பிறகு மணமக்களுக்கு புதுத்துணிகள் எடுத்து, பலகாரம் செய்து சமைத்து போடுவார்கள். இவ்வாறு திருமணச் சடங்குங்குகள் செய்யப்படுகிறது.

**இறப்புச் சடங்குகள்:**

இறப்பு சடங்கு என்பது ஒருவர் இறந்தது முதல் புதைக்கும் வரை செய்யும் சடங்கு இறப்பு சடங்கு ஆகும்**.** இறப்புச் சடங்குகள் இரு வகைகளாக பிரிக்கப்படுகிறது.

1.பச்சை சடங்கு

2.உலர்ந்த சடங்கு

**பச்சை சடங்கு :**

பச்சை சடங்கு என்பது பிணத்தை வீட்டிலோ சுடுகாட்டிலோ வைத்துக்கொண்டு செய்யும் சடங்காகும் பச்சை சடங்கு இருவகைகளாக பிரிக்கப்படுகிறது.

1. வீட்டில் செய்யும் சடங்கு

2.சுடுகாட்டில் செய்யும் சடங்கு

**வீட்டில் செய்யும் சடங்கு:**

திருமணமான ஒரு ஆண் இறந்தால், அவரின் மனைவிக்கு புதுத்துணி உடுத்தி பூவும் பொட்டும் வைத்து விடுவார்கள். இறந்தவரின் உடலை வீட்டிலேயே வைத்து மனைவியை பிணத்துக்கு பக்கத்தில் உட்கார வைத்து கையில் கண்ணாடி வளையல் அணையை வைத்து உடைப்பார்கள். தலையில் வைத்திருக்கும் பூவை எடுத்து விடுவார்கள். நெற்றியில் பொட்டை அழிந்து விடுவார்கள். பின்னர் நீ இன்றோடு எனக்கு கணவன் இல்ல நான் உனக்கு மனைவியும் இல்லை என்று மனைவியை சொல்ல வைத்து இறந்தவரை பார்க்காமல் அவரின் கையில் இருந்து வெற்றிலை பாக்கை மனைவி வாங்க வேண்டும். பின்னர் இறந்தவருக்கு எண்ணெய் அரப்பு தேய்த்து விடுவார்கள். அதை இறப்புக்கு வந்த அனைவரும் தேய்க்கலாம். இவ்வாறு செய்த பிறகு இறந்தவரின் மீது ஐந்து குடம் தண்ணீர் ஊற்றி குளிக்க வைப்பார்கள். வீட்டில் வாசலுக்கு எதிர் திசையில் தலை வைத்து படுக்க வைப்பார்கள். அதாவது கிழக்கு வாசல் வீடாக இருந்தால் மேற்கு

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி) 

திசையில் தலை வைப்பார்கள். பின்னர் இறந்தவரின் பங்காளிகள் இறந்தவருக்கு மஞ்சள் நீர் தெளித்து கோடி துணி போட்டு பின்னர் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வார்கள்.

**சுடுகாட்டில் செய்யும் பச்சைச் சடங்கு :**

சுடுகாட்டிற்குச் சென்ற பிறகு தேங்காய் பழம் வைத்து பூசை செய்து, புதைக்கும் போது தலை தெற்கிலும் கால் வடக்கிலும் வைத்து புதைப்பார்கள். பின்னர் தாய்க்கு தலைமகனும் தந்தைக்கு இளைய மகனும் எல்லா சடங்குகளும் செய்வார்கள். இளைய மகன் புதைக்கும் போது முதலில் மண் தள்ளுவார் மகன்கள் இல்லை எனில் மகள்கள் தள்ளுவார்கள். அதற்குப் பிறகு உறவினர்கள் தள்ளுவார்கள். புதைத்த பிறகு மீண்டும் இறந்தவரின் சமாதியை வணங்கிவிட்டு வீட்டிற்குச் செல்வார்கள்.

**உலர்ந்த சடங்கு:**

இறந்து மூன்று நாட்களுக்குப் பிறகு குழி மேட்டுக்குச் சென்று தீபமேற்றி வணங்குவார்கள். இறந்த உடனே வீட்டில் தீபம் ஏற்றி வைப்பார்கள் சடலத்தை புதைத்து விட்டு வருவதற்குள் வீட்டை சுத்தம் செய்வார்கள். புதைத்து விட்டு வருபவர்கள் தலையில் நீர் தெளித்துக் கொண்டு வீட்டுக்குள் சென்று தீபத்தை வணங்குவார்கள்.

**கருப்பு செய்தல்:**

இறந்த மூன்றாவது அல்லது ஐந்தாவது நாளில் கருப்பு செய்வார்கள். அதுவும் வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில் செய்வார்கள். மாதத்தின் கடைசி நாளில் இறந்தால் அன்றே கருப்பு செய்வார்கள். கருப்பு செய்யும் போது பெண்ணின் அண்ணன்மார்கள் புது உடை எடுத்து உடுத்தி, இறந்தவருக்கு பிடித்த பொருட்களை எடுத்துக்கொண்டு குடிமேட்டில் வைத்து பூஜை செய்வார்கள். பின்னர் அசைவ உணவை எச்சில் படாமல் செய்து, இறந்தவருக்கு கூரை மேல் வைத்துவிட்டு அனைவரும் உண்பார்கள். இவ்வாறு இறந்தவருக்கு சடங்குகள் செய்யப்படுகிறது.நம் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் பல நிகழ்வுகள் நடக்கும் அது போல குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் பெண்ணின் பங்கு உண்டு.

**முடிவுரை :**

இந்த கட்டுரையானது திருப்பூர் மாவட்டம் அனுப்பப்பட்டி கிராமத்தில் வாழக்கூடிய அருந்ததியர் இன மக்களில் பெண்களின் வாழ்வியல் நிலைகள், அவர்களுக்கான நம்பிக்கைகள் குறித்த கள ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டுரையாகும். வாய்மொழி சாரார் வழக்காறுகளில் நம்பிக்கைகள் சடங்குகள் என்பது பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியமான அங்கமாக திகழ்கிறது. இது சமூக கட்டமைப்பில் மாற்ற முடியாத ஒரு நிகழ்வாக இன்று வரை இருந்து வருகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள சடங்குகளில் பெண்களின் பங்கு என்பது மிக மிக

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

முக்கியமான ஒன்றாக உள்ளது. அது பெண்களை சார்ந்த சடங்குகள் அதிகமாக உள்ளது. அந்த அனுபவப்பட்டி கிராமத்தில் உள்ள சடங்குகள் அவர்களுக்கான சடங்குகளில் உள்ள நம்பிக்கைகள் குறித்த கல ஆய்வு முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கட்டுரையாகும்.நம்பிக்கைகள் சடங்குகள் சார்ந்த தகவல்கள் மற்றும் வாழ்க்கை முறைகள் அனைத்தும் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்ப மாறுபடுகின்றது கள ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட தகவல்களின்படி இன்னும் அதிகமான சடங்குகள் இருந்ததாகவும், காலப்போக்கில் சடங்குகளை குறைத்துக் கொண்டதாகவும் கால நேரங்கள் காரணமாக குறைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.